செ.வெ. எண்: 67 நாள்: 29.8.2017

<u>பத்திரிகை செய்தி</u>

அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையம் சென்னையில் இந்திய குடிமைப் பணிகளுக்கான முதல் நிலை தேர்வுக்கு பயிற்சி அளிப்பதற்கு (Preliminary Examination ) மாணவ / மாணவியர்களை சேர்த்திட 05.11. 2017 ( ஞயிற்றுக்கிழமை ) அன்று நடைபெறவுள்ள நுழைவுத் தேர்வுக்கான விண்ணப்பங்கள் நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

<u>இந்திய குடிமைப் பணிளுக்கான முதல் நிலை தேர்வு பயிற்சிக்கு விண்ணப்பிக்க வேண்டிய வழிமுறைகள் பின்வருமாறு:</u>

- மாணவ / மாணவியர்கள் தமிழ்நாட்டை சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்.
- ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / பிற்படுத்தப்பட்டோர் / மிகப் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் மற்றும் இதர இனத்தைச் சார்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.
- குறைந்தபட்ச கல்வித்தகுதியாகிய இளங்களை பட்டப்படிப்பு (B.A.,B.Sc., B.Com., மற்றும் தொழிற்பட்டப்படிப்பான B.E.,MBBS., B.D.S., B.Sc(Agri) மற்றும் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகள் அனைத்தும் ) முடித்தவராக இருத்தல் வேண்டும்.
- குறைந்தபட்ச வயத அனைத்து பிரிவினருக்கும் - 21
- அதிக பட்ச வயது இதர வகுப்பினர் – 32
- பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் ஒப்படைக்க கடைசி தேதி 20.09.2017 மாலை 5.45 மணிக்குள்.
- விண்ணப்பதாரர்கள் கல்வி / வயது /இருப்பிடம் ஆகிய சான்றுகளின் நகல்கள் மற்றும் புகைப்படத்துடன் ( Passport size ) மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

<u>மேற்குறிப்பிட்ட உச்ச வயது வரம்பிலிருந்து கீழ்க்கண்டவர்களுக்க விலக்களிக்கப்படுகிறது.</u>

- ஆதிதிராவிடர், அருந்ததியர் மற்றும் பழங்குடியினர் - 5 வருடம்
- பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் முஸ்லீம், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் - 3 வருடம்
- மாற்றுத்திறனாளிகள் - 10 வருடம்